செய்தி வெளியீடு எண்:803 நாள்:28.09.2021

<u>செய்தி வெளியீடு</u>

**06.10.2021 மற்றும் 09.10.2021 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள தமிழ்நாடு ஊரக உள்ளாட்சி தேர்தல், 2021–ஐ முன்னிட்டு பொது விடுமுறை அறிவிப்பது பற்றிய செய்திக் குறிப்பு**

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் 06.10.2021 மற்றும் 09.10.2021 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக நடைபெற உள்ள தமிழ்நாடு சாதாரண (Ordinary) ஊரக உள்ளாட்சி தேர்தல், 2021–ஐ முன்னிட்டு 06.10.2021 மற்றும் 09.10.2021 ஆகிய தேதிகளில் தேர்தல் நடைபெற உள்ள பகுதிகளுக்கு மட்டும் பொது விடுமுறையும் ஏனைய 28 மாவட்டங்களில் 09.10.2021 அன்று நடைபெற உள்ள தற்செயல் (Casual) ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ள பகுதிகளுக்கு மட்டும் பொது விடுமுறையும் அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான அறிவிக்கை 28.09.2021 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

**அரசு முதன்மைச் செயலாளர்**
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9